## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**12 |
| Name | : | **அண்ணாதுரை** (உதவி ஆய்வாளர்) |
| Father's / Husband Name | : | பெருமாள் |
| Address | : | பொருளாதார குற்றப்பிரிவு, பெரம்பலூர். |
| Age | : | 57/2026 |

**தேதி : 25.02.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். சம்பவ நாளில் பெரம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 09.06.2020ம் தேதி 16.00 மணிக்கு பொம்மனப்பாடி கிராம நிர்வாக அலுவலர் சசிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 1637/2020 சட்டபிரிவுகள் 16 கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 09.06.2020ம் தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடமான பொம்மனப்பாடி கிராம சர்வே எண். 152/2016 அந்த இடத்திற்கு சென்று சம்பவ இடத்தில் படம் வரைந்து சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இட சாட்சிகளான வாதி சசிகலா, பாலசந்தர், ராஜ்குமார், வினோத் ஆகியோர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிஹ செய்தேன். பிறகு நிலையம் வந்து மற்ற சாட்சிகளான சத்தியராஜ், சாந்தி, திவ்யா, முகமது உசேன், பட்டு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பிறகு 11.06.2020ம் தேதி வழக்கின்மற்ற சாட்சிகளான மல்லிகா, துளசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 13.06.2020ம் தேதி சாட்சி சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே வழக்கின் சட்டபிரிவு 16 கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு சட்டம் மற்றும் 374 இந்திய தண்டனை சட்டம் மாற்றம் செய்தேன். பின்னர் 10.11.2020ம் தேதி எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் நிலைய காவலில் தக்க பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே மேற்படி வழக்கில் குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக குற்ற முறைகேடு என்று எவர் புகார் கொடுத்தாலும், நாங்கள் அதனை புகாரினை எடுத்துக்கொள்வோம். புகாரில் எந்த ஒரு காவல் நிலையம் என்று குறிப்பு செய்யவேண்டிய அவசியமில்லை. புகார்தாரர் சசிகலா கொடுத்த புகாரில் 6வது வரியில் மேல் குறிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சசிகலா மேற்படி புகாரினை எழுதிக்கொண்டுதான் வந்தார். சசிகலாவுடன் அன்புராஜா என்ற கிராம நிர்வாக அலுவலர் காவல் நிலையத்திற்கு வந்தார். புகார்தாரர் சசிகலாவை 17.00 மணி அளவில் விசாரணை செய்தேன். சசிகலா காவல் நிலையத்திற்கு 16.00 மணிக்கு புகார் கொடுக்க காவல்நிலையம் வந்தார்.

சசிகலாவுடன் புகார் கொடுக்க வந்தபோது பாலசந்தர் (PW2) உடன் வரவில்லை என்றால் சரிதான். பாலசந்தர் (PW2) ஐ 17.00 மணிக்கு சம்பவ இடத்திலை விசாரணை செய்தேன். PW3 திவ்யா என்பவர் என்னிடம் போட்டோ கொடுத்தார். மேற்படி போட்டோக்களை நான் கனம் நீதிமன்றத்தில்

சமர்ப்பிக்கவில்லை.மேற்படி போாட்டோவானது அசலோ, அதனை ஒத்த நெகடிவ் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

PW3 திவ்யா 07.06.2020ம் தேதி சம்பவ இடத்திற்கு சென்றோம் என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். 09.06.2020ம் தேதி PW3 திவ்யாவை நிலையத்தில் வைத்து விசாரித்தேன். விசாரித்த நேரமானது 18.00 மணி இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். PW4 சத்தியராஜ் அவர்களை விசாரணை செய்யவில்லை என்று கனம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். தாங்கள் அவரை விசாரித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. PW6 சாந்தி என்னிடம் எந்த ஒரு போட்டோவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.